RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1996

OPEN ACCESS

# சுப்ரபாரதிமணியன் படைப்புகளில் அறச்சிந்தனை

ஜெ. சிவகாமிசுந்தரி [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620017, தமிழ்நாடு, இந்தியா

# Philosophical Thought in the Works of Subrabharathimanyan

J. Sivgamisundari [a, *]

[a] Research Department of Tamil, Bishop Heber College (Autonomous), Tiruchirappalli-620017, Tamil Nadu, India

* Corresponding Author:
Jsivagamisundari77@gmail.com

Received: 12-09-2022
Revised: 23-10-2022
Accepted: 01-11-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Subrabharathimanian is one of the modern writers who is deeply concerned about the society and the environment. In most of his works he has written about the Noyyal river and how it has been polluted by dye waste and garbage from Banyan companies. Most of his novel is about the about pollution of the atmosphere due to the fumes of factories, global warming, people being mentally affected by the noise of vehicles and about the diseases because of this. He has said about women workersin his novel Samayalarai Kalaiyangal, about child labourers in Pinangalin mugangal, about field workers in Thaeneer idaivaelai, about Tirupur condition in Naira and about weaver's problem in Tarinada. And also, in Mega vedippu article about the effects of methane gas coal mining. Sivappu Pattiyal essay on bird extinction and Marainthu Varum Marnangal based on tree extinction. Mos of his works are about the social welfare.

**Keywords:** Subrabharathimanyan, Relationship, Pinangalin mugangal, Mega vedippu

## முன்னுரை

நம் முன்னோர் மனித வாழ்வை அகம், புறம் என இரு வகையாற் பிரித்தனர். புறம் முழுவதும் போர், புகழ், கொடை, வீரம் பாடியது. அகம் என்பது மனத்தான் நிகழ்வது. ஆறம் எனப்பட்டதே இவ்வாழ்க்கை.

"அன்பும் அறனும் உடைத்தாயின் - இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது".

என்று கூறி அறத்திற்கு வலுசேர்த்திருக்கிறார் வள்ளுவர். இன்றைய சமுதாயம் ஊடகங்களின் மூலமாகவும் இணையங்களின் வழியேயும் அனைத்து செய்திகளையும் தெரிந்துக் கொள்கின்றன. இயந்திரமான வாழ்க்கை வாழக்கூடிய இன்றைய சூழ்நிலையில் அறத்தை பேணி காப்பது நம் ஒவ்வொருவரின் கடமை ஆகும். அத்தகைய கடமை உணர்வு கொண்டவர்களுள் ஒருவர் சுப்ரபாரதிமணியன். இவரின் படைப்புகளின் வழி காற்று மாசு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அறம் என்பதன் விளக்கம்

மனிதனுடைய நடத்தையின் நன்மை, தீமைகளை ஆராய்ந்து கூறுவதே அறவியல் என்பதாகும். இதனையே தமிழில் அறவியல் எனக் குறிப்பிடுகின்றனர். இச்சொல்லின் பொருளானது பழக்க வழக்கம்

என்பதாகும். மேலும் மனிதன் நலமாக வாழ்வதற்கும் நல் வாழ்வின் பயனாகிய இன்பத்தை அடைவதற்கும் அவன் கடைபிடித்து ஒழுக வேண்டிய நல்ல பழக்க வழக்கங்களையும் தீயவை என்று கடிந்து ஒதுக்க வேண்டிய செயல்களையும் அறிந்து நல்லவனவற்றை மட்டும் பின்பற்றி ஒழுகுவதையே அறமெனப் போற்றுகின்றனர்.

## சுப்ரபாரதிமணியன் அறிமுகம்

சுப்ரபாரதிமணியன் இயற்பெயர் சுப்ரபாரதிமணியன் பாரதியார் மீது கொண்ட பற்றால் தம் பெயரின் இடையே 'பாரதி'யை இணைத்துக் கொண்டார். 20.07.1956 ஆம் ஆண்டு சோமனூர் அருகில் உள்ள 'செகடந்தாளி' என்ற கிராமத்தில் பழனிச்சாமி, பழனியம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். பூசாகோ கலை அறிவியல் கல்லூரியில் முதுகலைப்படிப்பு படித்துள்ளார். தொலைபேசித் துறையில் உதவி கோட்ட பொறியாளராக பணியாற்றியவர். 1984 செப்டம்பரில் சுகந்தி என்பவரை இல்லத் துணைவி ஆக்கிக் கொண்டார். சுகந்தி சுப்ரபாரதிமணியன் தம்பதியினருக்கு ஸ்ரீமுகி, சுபமுகி என்ற இரண்டு பெண்குழந்தைகள் உள்ளனர். மனைவி கவிஞர் சுகந்தி சுப்ரபாரதிமணியன் 14.02.2009 இயற்கை எய்தினார். இவர் 16 நாவல்கள், 15 சிறுகதைத் தொகுப்புகள், 2 குறுநாவல் தொகுப்புகள், 10 கட்டுரைத் தொகுப்புகள் (வெளி நாட்டுப் பயண அனுபவங்கள் மற்றும் திரைப்பட நூல்கள்) உட்பட 65 நூல்கள் வெளியிட்டுள்ளளார். கனவு இதழை 33 ஆண்டுகளாகவும், கனவு திரைப்பட இயக்கம், தாய்தமிழ்ப் பள்ளியினை (பாண்டியன் நகர், திருப்பூர்) 20 ஆண்டுகளாகவும் நடத்தி வருகிறார். இந்தியாவின் பல்வேறு மொழியின் சிறந்த சிறுகதை எழுதாளர்களுக்கான "கதா92" பரிசு (1993) ஜனாதிபதி சங்கர்தயாள் சர்மாவிடம் பெற்றிருக்கிறார். திருப்பூர் பகுதிகளில் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு, பெண்களைச் சுரண்டும் சுமங்கலி திட்டத்தை ஒழிப்பது நொய்யலை பாதுகாப்பது போன்ற பல்வேறு சமூகப்பிரச்சனைகளை மையமிட்டு தனது படைப்புகளை இயற்றி வருகிறார்.

## காற்று மாசுபாடு

காற்று மண்டலம் வாயுக்களின் கலவையால் ஆனது. இதில் நைட்ரஜன் (78.09ூ), கார்பன்டை ஆக்ஸைடு (0.03ூ) மற்றும் ஆக்ஸிஜன்(20.94ூ) போன்ற வாயுக்களும், மற்ற தனிமங்கள் ஒரு சதவீதத்திற்கும் குறைவாக உள்ளது. இவை தவிர ஈரப்பதம் (ர்ரஅinவைல) தூசுக்கள், மந்த வாயுக்கள் புகை, ஹைட்ரஜன் சல்பைடு ஹைட்ரோ கார்ப்பன்கள் போன்றவையும் காற்று மண்டல்தில் காணப்படுகிறது.

"உலக சுகாதார நிறுவனத்தின் கூற்றுப்படி காற்று மண்டலம் மாசுபடுதல் என்பது காற்று மண்டலத்தில் உள்ள பொருட்களின் எத்தகைய அடர்வினால் மனிதனுக்கும் சுற்றுச்சூழலுக்கும் கேடு விளைவிக்குமோ அத்தகைய பொருட்களின் அந்த அடர்வு நிலையே காற்று மண்டல மாசு எனப்படும்" (Sabinaa, 2014).

## காற்று மாறுதலுக்கான முக்கியக் காரணங்கள்

நிலக்கரி அல்லது எண்ணெய் எரிக்கப்படுதல், பெட்ரோல் சுத்திகரிக்கப்படும் தொழிற்கூடங்கள், வெடிமருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள், உரத் தொழிற்சாலை, போக்குவரத்து வாகனங்கள் போன்றவற்றினால் உலகில் 98 சதவீதம் காற்று மாசுதலுக்கு உள்ளாகிறது. காற்று மாசுறுதலைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளாவன வாகனங்களிலிருந்து வெளிப்படும் ஹைடிரோ கார்பன்களை உள் ஈர்த்தல், எரித்தல் பரப்புக் கவர்ச்சி போன்ற செயல்முறைகள் மூலம் கட்டுப்படுத்தலாம். தொழிற்சாலைத் துகள்கள் வெளியாவதை வடிப்பான்கள், மின் வீழ்படிவாக்கிகள், துகள் சேகரிப்பான்கள் மூலம் குறைக்கலாம். சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், காற்று மாசுறுதல் தடுப்புச் சட்டம் ஆகியவற்றை எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் பயன்படுத்திக் காற்று மாசுறா வண்ணம் தடுக்கலாம். காற்று மாசுறுதலைத் தடுக்கும் சாதனங்கள் பொருத்தப்பட்ட சோதனைக் கூடங்களை அமைக்கும் படி ஒவ்வொரு தொழிற்சாலையையும் கட்டாயப்படுத்தலாம். வேதியப் பூச்சிக் கொல்லிகளுக்குப் பதில்

உயிரியல் பூச்சிக் கொல்லிகளை வேளாண்மையில் பயன்படுத்தலாம். காடுகள் வளர்த்தல் மூலம் தூய ஆக்ஸிஜனைப் பெறலாம்.

## சுப்ரபாரதிமணியன் புதினத்தில் காற்று மாசுபாடு

சுப்ரபாரதிமணியன் தம் புதினத்தில் காற்று மாசுபாட்டை இவ்வாறாக குறிப்பிடுக்கிறார். "எதிர் காவல் நிலைய வளாகத்தில் கைப்பற்றப்பட்ட இரட்டைச் சக்கர வாகனங்களும், நான்கு சக்கர வாகனங்களும், புழுதி படர்ந்து வீதியை நோக்கிக் கிடந்தன. வீதியில் பறக்கும் புழுதியெல்லாம் பழைய வாகனங்கள் மீது படர்வதற்காகவே என்பது போல் வாகனங்கள் அழுக்காகியிருந்தன." மேலும் "எங்கு போனாலும் சிவகாமிக்கு குப்பைக்குள் உட்கார்ந்திருக்கிற மாதிரி இருக்கும் கூட்டி பெருக்கி முன்வாசலில் தண்ணீர் தெளித்து விட்டால் போதும் பெருக்க பெருக்க தூசு நிறைந்து கொண்டே இருப்பது போலிருக்கும். எங்கிருந்து தூசு கிளம்புகிறதென்று தெரியாது. அதுவும் பனியன் துகள்களும், பீஸ்களும் கிளப்பும் தூசும் குப்பையும் எடுக்க எடுக்க வந்து கொண்டே இருக்கும்.

"குப்பையாய் கொட்டும் பனியன் பீஸ்களை எடுத்து வந்து முன்னெல்லாம் சிவகாமி நீர் காய வைக்கப் பயன்படுத்துவாள் புகை எங்குமாய் மண்டிப் போகும் குபு குபுவென்று நன்கு எரியும் பல வர்ண ஒளிப் பிரகாசங்களைக் காண்பாள். அடுப்பில் பட்டாசைப் போட்டு விட்டதைப் போல் பல வர்ண ஒளி மின்னும்" என்று நைரா புதினத்தின் வழி திருப்பூர் நகரின் காற்று மாசுபாட்டை சுப்ரபாரதிமணியன் கூறுகிறார் (Subramaniyan, 2016). மேலும்

## சுப்ரபாரதிமணியன்

காடழிப்பு, கார், கரியமில வாயு என்னும் தலைப்புகளில் மேகவெடிப்பு என்னும் கட்டுரை நூலில் காற்று மாசுபடுதல் பற்றிக் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார் (Subramaniyan, 2016).

## காடழிப்பு

காட்டு நிலங்களை, வேளாண்மை, நகராக்கம் போன்ற காடல்லாத நிலப் பயன்பாடுகளுக்காகவோ அல்லது அதன் வளங்களுக்காகக் காட்டை வெட்டி நிலத்தைத் தரிசாகவோ மாற்றுவதே காடழிப்பு எனப்படும்.

காடழிப்பினால் ஏற்படும் தீமைகள், அதைக் கட்டுப்படுத்தும் முறைகளை இணையம் இவ்வறாக கூறுகிறது. அதிக மழை அல்லது வறட்சியால் பயிர் விளைச்சல் பாதிக்கப்படும். குளிர் பிரதேசங்களில் பயிர்களின் வளர்ச்சிப் பருவம் அதிகரிக்கின்றது. பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. கரியமில வாயு அதிகரிப்பதால் உற்பத்தித் திறன் அதிகரித்து பயிர்கள் அதிக அளவு சத்துக்களை மண்ணிலிருந்து எடுத்துக் கொள்ளும். புவி வெப்ப மடைவதால் கொசுவின் வாழ்நாள் மற்றும் இனவிருத்தியின் அளவு அதிகரிக்கிறது இதனால் மலேரியா பரவுகின்றது. பாக்டீரியா மற்றும் பூஞ்சைகள் வளர்வதற்கு உகந்த நிலை ஏற்படுவதால் விளை பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் சேதமடைகின்றன. வளி மண்டலத்தின் ஓசோன் படலம் சிதைவதால் தோல் புற்று நோய்கள் அதிகம் ஏற்படும். அதிக வெப்பத்தினால் பனிகட்டிகள் உருகும் நீரினால் கடல் மட்டம் அதிகரிக்கிறது. இது தொடர்ந்ததால் மாலத்தீவும், வங்கதேசமும் நீரில் மூழ்கும் அபாயம் உள்ளது. கடலோரப் பகுதிகளில் உப்பு நீர் உட்புகுவதால் நிலத்தடி நீர் உவர்ப்புத் தன்மையாக மாறும்.

காடழிப்பினால் ஏற்படும் விளைவுகளை கட்டுபடுத்தும் முறைகள் இணையத்தில் கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது. "பெட்ரோலிய எரிபொருட்கள் உபயோகிப்பதன் அளவைக் குறைக்க வேண்டும். இயற்கைச் சக்தியைத் திறம்பட உபயோகித்துக் கரியமில வாயு வெளியாகும் அளவை குறைக்க வேண்டும். இயற்கை உரங்களைப் பயன்படுத்தவும் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்கவும் நிலக்கரி எரிதலைத் தடை செய்யவும் குறைந்த அளவு முன்னேற்ற நாடுகள் ஒப்புக் கொள்ள வேண்டும். வளர்ச்சியடைந்த நாடுகள் சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்காத இரசாயணப்

பொருட்களைப் பற்றி தொழில் நுட்பங்களைப் பிற நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் (Subramaniyan, 2016).”

சுப்ரபாரதிமணியன் படைப்பில் காடழிப்புசுப்ரபாரதிமணியனின் “மறைந்து வரும் மரங்கள்” என்னும் நூலில் இவ்வாறாக மரங்களின் அழிவைப் பற்றியும், மீட்பு பற்றியும் கூறுகிறது. “தமிழ் இலக்கியங்கள் அடையாளப்படுத்தியுள்ள நானூற்றுக்கும் மேற்பட்ட மரங்களில் தற்போது எத்தனை மரங்கள் கண்ணில் தென்படுகின்றன என்ற கேள்வியை ஆழமாகவும் அழுத்தமாகவும் எழுப்பும் இந்நூல் மரங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது.

இந்தியாவில் 365 விலங்கினங்களும் 1236 தாவர இனங்களும் அழியும் தருவாயிலுள்ளன. எனும் இந்திய விலங்கியல் கணக்கெடுப்பு நிறுவனத்தின் அறிக்கையை கவலையோடும் கரிசனத்தோடும் அணுகும் இந்நூல் மரங்களின் முக்கியத்துவத்தையும் அவற்றை அழிவிலிருந்து மீட்க வேண்டிய தேவையையும் விவரிக்கிறது” (Subramaniyan, 2016).

தில்லை மரம் அழிவை பற்றி சுப்ரபாரதிமணியன் இவ்வாறு கூறுகிறார். “தில்லையின் விறகு நல்ல வெப்பத்திறன் கொண்டது. எனவே விறகுக்காக அதிகம் வெட்டி நாசமாக்கி விட்டார்கள். எங்கள் திருப்பூருக்கு வரும் டன்டன்னான விறகுக் கட்டைகளின் லாரிகளில் தில்லையும் உண்டு” (Subramaniyan, 2017).

“தமிழகத்தில் 1950 ஆம் ஆண்டு வாக்கில் 30,000 மரங்கள் இருந்தன. ஆனால் 2015 ஆம் ஆண்டு வாக்கின் கணக்கின் படி 10,000 மரங்களே உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. வெகுவாகக் குறைந்து வருகிறது” (Subramaniyan, 2017).

“கருவேல மர ஒழிப்பு இயக்கம்”

ஒன்று உள்ளதையும் பதிவிட்டுள்ளார் (Subramaniyan, 2017).

இதன் மூலம் விறகுக்காகவும் மரங்கள் பயன்படுத்துப்படுவது தெளிவாகிறது.

மேலும் “வேலூர், திருவண்ணாமலைப் பகுதிகளில் இருந்தவை வெட்டை நாசமாக்கப்பட்டுவிட்டன. இப்போது கர்நூல், கடப்பா என்று அழிக்கப்பட்டு வருகிறது. முதிர்ந்த மரங்கள் களவளப்படாமல் இருக்கின்றன. இதை வெட்ட அதிக கூலி, அதிக பணத்திற்கு ஆசைப்பட்டு பல தமிழர்கள் உயிரை பலி கொடுக்கிறார்கள்” (Subramaniyan, 2018).

என்று சந்தன மரம் விலைமிக்கது அவை வேலூர், திருவண்ணாமலை, கர்நூல், கடப்பா போன்ற நகரங்களில் அழிக்கப்பட்டு வருவதை சுப்ரபாரதிமணியன் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார். இதன் மூலம், விறகுக்காகவும், விலையுயர்ந்த பொருட்கள், அழகு சாதனங்கள் செய்யவும் மரங்கள் வெட்டப்படுகின்றன என்று தெளிவாகிறது.

## காடழிப்பு பற்றி இவ்வாறாக கூறுகிறார்

“புவி வெப்பமடைதல், காலநிலை மாறுபாடு போன்ற முக்கியமான சூழல் பிரச்சனைகளுக்கு காடழிப்பு முக்கிய காரணமாக இருக்கிறது. காட்டுவளம் சூழல் மாசடைதலைத் தடுக்கிறது. வளி மண்டலத்தில் வெளியேறும் பல்வேறு வாயுக்களை மரங்கள் கிரகித்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றவை. நீர் ஆவியதலால் வளி மண்டலத்தில் நீராவியின் செறிவு அதிகரித்து உயர்ந்த நிலையிலான காடுகள் காற்றைத் தடுத்து மழையைத் தருகிறது. காடுகளில் உள்ள பல்வேறு பொருட்கள் எரிபொருளாகப் பயன்படுத்துவதற்கும். மருந்து உணவு வழங்கும் தாவரங்களைக் கொண்டிருப்பதும் வீட்டுப் பொருட்களைத் தயாரிக்க மூலப் பொருட்களைத் தருவதும் செய்கின்றன (Subramaniyan, 2018). தாவரப் போர்வை அதிகமுள்ள பகுதிகளில் காற்றின் வேகம் கட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்” என்று காடுகளின் பயனையும் “காடுகளை தொடர்ந்து அழித்துக் கொண்டிருப்பதால் புவி வெப்பமடைதல் நிகழ்கிறது. மண்ணரிப்பு சுலபமாகிறது” என்று காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளையும் குறிப்பிடுகிறார் (Subramaniyan, 2017).

## கார்

கார் என்பது தன்னை இழுத்துச் செல்லும் உந்துப்பொறியை தனக்குள்ளேயே சுமந்து கொண்டு பயணிகளை ஏற்றுக்கொண்டு செல்லும் சக்கரமுள்ள இயக்கூர்தி ஆகும். இத்தகைய கார் உபயோகிப்பது சுற்றுச்சூழலுக்கு எவ்வளவு பாதிப்பு ஏற்படும் என்பதை கீழ்க்கண்டவாறு பதிவிடுகிறார்.

“கார் உபயோகிப்பதால் அதிகமாகும் காற்று மாசுபாடும் வாகன நெரிசலும் பெரும் நகரங்களின் சிரமப்பட்டியலில் தலையானவை” என்றும் “கார்களை கட்டுப் படுத்துவதன் மூலம் மாசு, வாகன, நெரிசலைக் கட்டுப்படுத்த சீன அரசின் அதிரடித் திட்டங்கள் சுற்றுச்சூழல் வாதிகள் மத்தியில் மிகவும் முக்கியமானதாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. காருக்கு டாட்டா சொல்வது நல்ல சுத்தமான காற்றுக்கு வெல்கம் கூட” என்று காற்று மாசுபாடுக்குக் காரணம் காரும் ஒன்று என்று கூறுகிறார்.

## கரியமில வாயு

கரியமில வாயு என்பது (கார்பன்டையாக்சைடு) பிராண வாயுவாகிய ஆக்ஸிஜனோடு இணைந்த கூட்டுக் கலவை வாயுவாகும். சுப்ரபாரதிமணியன் கரியமில வாயுவின் பயன்பாட்டை இவ்வாறு குறிப்பிடுகிறார். அதிகளவு கரியமில வாயு வெளியேற்றப்படுவதில் முன்னிலையில் உள்ள அமெரிக்கா, சீனா என்றும் “சீனா அதிக அளவில் கரியமிலவாயுவை வெளியேற்றி மக்களையும் சங்கடத்துக்குள் ஆட்படுத்தி வருகிறது” என்றும் அமெரிக்காவில் இந்த வகை மாசுபாடுகளைக் குறைக்க மின்சக்தி சேமிப்பு, வாகனங்களின் தரம் உயர்த்துதல் போன்ற பல திட்டங்களை அரசு அறிவித்தது” என்று கூறுகிறார் (Subramaniyan, 2017). இதன் மூலம் சுப்ரபாரதிமணியனின் காற்று மாசு குறித்த அக்கரை புலனாகிறது.

## முடிவுரை

சுப்ரபாரதிமணியன் படைப்புகளில் அறச்சிந்தனை என்றும் கட்டுரை தலைப்பில் அறம் என்பது நல்ல பழக்க வழக்கங்களையும் தீயவை என்று கழந்து ஒதுக்க வேண்டிய செயல்களையும் அறிந்து நல்லன மட்டும் பின்பற்றி ஒழுகுவது அறம் என அறியப்படுகிறது. சுப்ரபாரதிமணியனின் பிறப்பு, கல்வி, படைப்புகள் குறித்து விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. காற்றில் உள்ள வாயுக்களால், தொழிற்சாலைகளால், வாகனங்களால் மாசுக்குள்ளாவதும், அவைகட்டுபடுத்தும் முறைகளும் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. சுப்ரபாரதிமணியன் புதினங்களில் தூசு, புகை, குப்பைகளினால் திருப்பூர் நகரம் சுற்றுச்சூழலால் பாதிக்கப்படுவது அறிந்து கொள்ள முடிகிறது. காடழிப்பினால் தில்லைமரம், கருவேலம், சந்தன மரம், அழியப்படுவதும், இதனால் புவிவெப்பமடைதல் கால நிலை மாறுபாடு ஏற்படுவதும், தாவரம் மற்றும் விலங்குகளின் அழிவும் பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது. தற்போது கார் பெறுகி வரும் சூழலில் “காருக்கு டாட்டா சொல்வது நல்ல சுத்தமான காற்றுக்கு வெல்கம் கூட” என்ற சுப்ரபாதிமணியன் பதிவு மூலம் காற்று மாசுக்கு காரும் ஒன்று என்று தெளிவாகிறது. கரியமில வாயுவை வெளியேற்றுவதை சீனா, அமெரிக்க போன்ற நாடுகள் செய்வது சங்கடத்தில் ஆழ்த்துவது வருத்தமளிப்பதாக உள்ளது.

# References

Sabinaa, P.S. (2014) Sutrusuzhal Kalvi, New Century Book House, Chennai, India.

Subramaniyan, (2014) Neira, New Century Book House, Chennai, India.

Subramaniyan, (2016) Mega Vedippu Neira, New Century Book House, Chennai, India.

Subramaniyan, (2017) Marainthu Varum Marangal, New Century Book House, Chennai, India.

Subramaniyan, (2018) Pasumai Arasiyal, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License